பக்கங்கள்: 09

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 தை 09 திங்கட்கிழமை 22.01.2023 கதிர் 76

**இது ரகசியம் அல்ல!**

நேற்று வலைத்தளங்களில் திடீரென ஒரு பரபரப்புச் செய்தி. இராஜவரோதயம் சம்பந்தன் இனிக் கூட்டமைப்பின் தலைவர் இல்லை என்றது அந்தச் செய்தி. அடடா..! புதிய கூட்டமைப் புக்காரர்களுக்கு அதுவும் செல் வத்துக்கும் ☞2

# புதிய கூட்டமைப்புக்கு விரைவில் புதிய தலைவர் தெரிவாகுவாராம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து தமிழ் அரசுக் கட்சி வெளியேறிவிட்டது என்று கூறிக்கொண்டு 5 கட்சிகள் இணைந்து உருவாக்கிய ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கிற புதிய கூட்டமைப்புக்கு புதிய தலைவர், செயலாளர் ஆகியோர் விரைவில் நியமிக்கப்பட உள்ளனர் என்று ரெலோ கட்சியின் பேச்சாளர் சுரேன் குருசாமி தெரிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்தானா என்று அவரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். ☞2

## உள்ளூராட்சித் தேர்தலை 6 மாதங்களுக்கு ஒத்திப்போட்டால் 1200 கோடி ரூபா மீதமாம்

### 'மொட்டு' எம்.பி. சொல்கின்றார்




இப்போதைய நிலையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திப்போடுவதே சரியான முடிவு.

தேர்தலை ஆகக்குறைந்தது 6 மாதங்களுக்கு ஒத்திப்போட் டால் 1200 கோடி ரூபா மீதமாகும்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் நாடாளு மன்ற உறுப்பினர் மதுர விதா னகே தெரிவித்தார்.

அவர்மேலும்கூறுகையில்,

நாங்கள் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குத் தயாராகவே இருக்கின்றோம். இருந்தும், இப்போது நாடு இருக்கின்ற நிலையில் தேர்தலை ஒத்திப்போடுவதே சிறந்தது.

அதில் மிஞ்சும் பணத்தை எடுத்து பொருளாதாரத் தேவைகளுக்குப் பயன் படுத்தலாம்.

இந்தத் தேர்தலை மூன்று அல்லதுநான்குமாதங்களுக்கு ஒத்திப்போடுவது நல்லம் என்பது தான் எனது நிலைப்பாடு. ஆகக்குறைந்தது 6 மாதங்க ளுக்கு தேர்தலை ஒத்திப்போட் டால் ஆயிரத்து 200 கோடி ரூபா நிதி மீதமாகும். அதை வைத்து எவ்வளவோ சேவை செய்ய லாம். மக்கள் பொதுவாக எல்லா அரசியல் வாதிகளையும் வெறுக்கிறார்கள். இப்போதைய பொருளா தார நிலையின் கீழ் மக்கள் என்ன நிலைப் பாட்டில் இருக்கின்றார்கள் என்று சொல்ல முடியாது.

எனக்கு வாக்களித்த 70 ஆயிரம் மக்கள்கூட இப்போது என்ன முடிவெடுத்திருக்கின்றார் கள் என்று கூற இயலாது.

சம்பளப் பிரச்சினை இருக்கின்றது. எரிபொருள் பிரச்சினை இருக்கின்றது. வைத்தியசாலைகளில் பிரச்சினை இருக்கின்றது. எல்லாப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்குப் பணம் தேவைப்படுகின்றது.

இப்படியான ஒரு சூழ்நிலையில் தேர்தலுக்குச் செல்வது பொருத்தமானதா என்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

இந்தப் பிரச்சினையைப் பயன்படுத்தி ஆட்சியை பிடிப்பதை விடவும் மக்களின் பிரச்சி னைகளை எப்படித் தீர்க்கலாம் என்றே எல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும் - என்றார்.



## கெரோயினுடன் கைதானவருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, ஜன 23

தென்மராட்சி-கெற்பேலிப் பகுதியில் 20.3 கிராம் கஞ்சாவுடன் கைதான நபரை எதிர்வரும் மூன்றாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டது.

21/01 சனிக்கிழமை பிற்பகல் சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் 45 வயதான நபர் ஒருவர் 20 கிராம் 300 மில்லிக் ☞2

### சுதந்திர தினத்தன்று

## வடக்கு மாகாண சபையில் தனி பௌத்த நிகழ்வுகள்

### வெடித்தது சர்ச்சை

ந.லோகதயாளன்.

யாழ்ப்பாணம், ஜன.23

இலங்கையின் சுதந்திர தினத்தையொட்டி வடக்கு மாகாண சபையில் ஏற்பாடு செய்யப்பட்டுவரும் சமய நிகழ்வுகள் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன. பௌத்த மதச் சடங்களை மட்டுமே மாகாண சபையில் மேற் கொள்வதற்குத் திட்டமிடப்பட்டு வருவதாக எழுந்துள்ள குற்றச் சாட்டுக்களாலேயே இந்தச் சர்ச்சை வெடித்துள்ளது.

இலங்கையின் சுதந்திர தினம் பெப்ரவரி 4ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. இதையொட்டி நாட்டின் பல பகுதிகளிலும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டிலும் நிகழ்வுகள் நடக்கவுள்ளன. இதில் சைவ சமயச் சடங்குகள் வவுனியாவிலும் கிறிஸ்தவ சமயச் சடங்குகள் மன்னாரிலும் நடைபெற ஏற்பாடாகி வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள மகாண அலுவலகத்தில் பௌத்த மதச்சடங்குகளை நிகழ்த்துவதற்கான ஆயத்தங்கள் மட்டுமே செய்யப்பட்டு வருகின்றன. பெப்ரவரி 2ஆம் திகதி இரவு முதல் பிரித் ஓதுவதற்கான ஒழுங்குகள் செய்யப்படவுள்ளன. மறுநாள் காலையில் பிக்குகளுக்கு தானம் வழங்கப்படவுள்ளது. பிரித் ஓதுவதற்காக ☞2

## தேர்தலை ஒத்திப்போட்டால் அரசை எதிர்க்கும் சர்வதேசம்



### தயாசிறி எம்.பி. முன்னெச்சரிக்கை

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திப்போட்டால் சர்வதேச நாடுகள் இந்த அரசுக்கு எதிராகத் திரும்பும்.

-இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒருவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தல் அரசால் ☞2

## நானே மேயர் வேட்பாளர் அடம்பிடிக்கிறார் ரோஸி

### இன்னும் முடிவில்லை என்கிறது ஐ.தே.க.

கொழும்பு மாநகர சபைக்கான தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் நானே மேயர் வேட்பாளராகப் போட்டியிடுகின்றேன்.

-இவ்வாறு கொழும்பு மாநகர சபையின் தற்போதைய மேயர் ரோஸி சேனாநாயக்க தெரிவித்தார்.

நேற்று வேட்புமனுத் தாக்கலின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். ☞2



காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சித்தார்த்தனுக்கும் அவ்வளவு துணிச்சலா? அப்ப புதுக் கூட்டில ஏதோ விசேசம் இருக் கும்தான் போல என்று விசயத்துக்குள்ள போய்ப் பார்த்தேன்.

அந்தச் செய்தியிலேயே வீடியோ லிங்கும் இருந்தது. ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேன் குருசாமி நடத்திய செய்தியாளர் சந்திப்பு லிங் அது. புதிய கூட்டமைப்பில் இன்னும் அவருக்கு பேச்சாளர் பதவி கொடுக்கவில்லை. இருந்தாலும் பின்னணி யில் "ம்" ஆங்கில எழுத்துப் பதுங்கியிருக்கும் கூட்டமைப்புப் பதாகையுடன் அமர்ந்திருந்து விளக்கம் கொடுத்துக்கொண்டிருந்தார் சுரேன்.

செய்தியாளர் ஒருத்தர் அவரிடம் கூட்டமைப்பின் தலைவராக இரா.சம்பந்தன்தான் நீடிக்கிறாரா என்று கேட்கிறார். அதற்கு பதுங்கல் கூட்டமைப்பு (ஜனநாயக என்கிற "ம்" பதுங்கியிருப்பதால் அதை அப்படிக் கூப்பிடுவதில் தவறு ஒன்றுமில்லை என்று நினைக்கிறேன்) இப்போது 5 கட்சிகளோடு பயணிக்கத் தொடங்கியிருக்கிறது. அந்தக் கூட்டமைப்பு தனது தலைவர், செயலாளர் போன்ற பதவி நிலைகளை விரைவில் அறிவிக்கும், அந்த அறிவிப்பில் தான் யார் தலைவர் என்பது தெரியவரும் என்கிறார்.

செய்தியாளரும் விடுவதாயில்லை அவரது வாயைக் கிளறி ஒரு உருப்படியான பதிலைப் பெற்றுவிடலாம் என்று துடிக்கிறார். "அப்ப, இப்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக சம்பந்தன் இல்லை என்று கூறுகின்றீர்களா?" என்று திரும்பவும் கேட்கின்றார். கூட்டமைப்பில் இருந்து தமிழ் அரசுக் கட்சி வெளியேறியதிலிருந்து அதன் பதவி நிலைகளும் வறிதாகி இருப்பதாகவே நாங்கள் கருதுகின்றோம் என்று சுரேன் பதில் சொல்கிறார்கள்.

அதைக் கேட்டதும்தான் எனக்குக் கொஞ்சம் நிம்மதி. எங்கே சம்பந்தனைத் தூக்கி எறியுமளவிற்கு சம்பந்தனுக்கும் சித்தார்த்தனுக்கும் துணிச்சல் வந்திட்டதோ என்று எனக்கு இருந்த பயத்துக்கு விடை கிடைச்சதில எனக்குச் சந்தோசம். "ஓம்! சம்பந்தன் இப்ப எங்கட தலைவரில்லை'' என்று நெத்தியடியாச் சொல்ல முடியேல்ல. மென்று விழுங்கவேண்டியிருக்கிறது.

எனக்கு நகைச்சுவை நடிகர் வடிவேலு தான் ஞாபகத்துக்கு வந்தார் "ம்... அது! இந்த சூனா பானாவ பாத்து அந்தப் பயம் இருக்கட்டும்'' என்பார் வடிவேலு. சுரேனின் பதிலைப் பார்த்ததும் எனக்கு வடிவேலுவின் இடத்தில் சம்பந்தரைத் தான் வைத்துப் பார்க்கத் தூண்டியது. வயசு போனாலும் ஒற்றை சீட்டே கதி எண்டு இருந்தாலும் தலைவர் தன் "கெத்தை" விடேல்லை என்றதை நிரூபிக்கிறார் பாருங்கோ!

........

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் முடிந்து வாக்களிப்புத் திகதி மார்ச் 9 என்று அறிவிப்பு வந்தாலும் மழை விட்டும் தூவானம் விடாத மாதிரி வேட்புமனுத் தாக்கல் சிரிப்புக் கதைகள் இன்னும் குறைந்தபாடில்லை.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி அதுதான் முன்னாள் முதல்வர்களின் (மாகாணம் + மாநகரம்) கூட்டு சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வேட்புமனுக்கள் எல்லாம் தயாரிக்கப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், தேர்தல் திணைக்களத்துக்குக் கொண்டுபோய் குடுக்கத்தான் ஒருத்தரும் இல்லையாம். உள்வீட்டுத் தகவல் என்னவென்றால், வேட்பாளர் பட்டியலைத் தயாரித்தது மணி அணி (மாநகர முதல்வர் அணி) கட்சியால் வேட்புமனு தாக்கல் செய்வதற்கான அதிகாரமளிக்கப்பட்ட முகவராக நியமிக்கப்பட்டவர் விக்கி அணி (மாகாண முதல்வர் அணி) ஆள். வேட்புமனுக் கையளிக்கவேண்டிய நேரத்தில் மாகணத்தின்ற ஆள் தன்ரை செல்போனை ஒவ் பண்ணிப்போட்டாராம்.

"இதென்ன பெரிய விசயம் இதைவிடப் பெசல் ஜட்டம் எல்லாம் உள்ள இருக்கு" என்ற கணக்காக, திருகோணமலையில மாகாணம் தன்ர சார்பில ஒரு முகவரை நியமிச்சிருக்கிறார். ஆனால் அங்க கட்சிக்கு ஒருத்தரும் வேட்புமனுவே எழுதுற மாதிரியில்லையாம். எங்கையடா ஆள் என்ற தேடிப்பார்த்தபோது, மகாணத்தின்ரை அதிகாரமளிக்கப்பட்ட ஆள் வேற கட்சியில வேட்பாளரா ஏற்கனவே வேட்புமனுக் குடுத்திருக்கிறாராம்.

அதுக்கும் மேல முல்லைத்தீவில அதிகாரமளிக்கப்பட்ட முகவர் கட்டுப்பணத்தையும் வேட்புமனுவோட சேர்த்துக் கட்டலாம் தானே என்று இருந்துபோட்டு கடைசி நாள் காசையும் கொண்டு வந்தவராம். இங்க ஏன் வாறீங்கள் போட்டு வாங்கோ என்று ஆள திருப்பி அனுப்பிவிட்டிருக்கினம் அதிகாரிகள்.

எங்களிட்டத் தீர்வுத் திட்டம் இருக்கு உரிய நேரத்தில பகிரங்கப்படுத்துவம் என்று உள்ளூராட்சித் தேர்தலுக்கே உதார்விட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி இந்தமுறை வடக்கில 2 மாவட்டங்களில் வேட்புமனுவே தாக்கல் செய்யவில்லை. யாழ்ப்பாணம், மன்னார் இரண்டு மாவட்டங்களிலயும் ஒரு சபையிலகூட போட்டியிடவில்லை. ஏனைய 3 மாவட்டங்களில் தலா ஒரு சபையில மட்டும்தான் போட்டி போடுகின்றனர்.

ஒருவேளை தீர்வுத் திட்டம் தயாரிக்க மும்மரத்தில் வேட்புமனுக்களை நிரப்ப மறந்திரட்டினம் போல.....!

**இடி மின்னல்**

## நானே மேயர்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், கொழும்பு மாநகர சபைக் கான மேயர் வேட்பாளர் குறித்து கட்சி இன்னும் முடிவெடுக்கவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் மேயர் வேட்பாளராக முஜிபுர் ரஹ்மான் போட்டியிடுகின்றார்.

## புதிய கூட்டமைப்பு........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பு இப்போது 5 கட்சிகளோடு பயணிக்கத் தொடங்கியிருக்கிறது. அந்தக் கூட்டமைப்பு தனது தலைவர், செயலாளர் போன்ற பதவி நிலைகளை விரைவில் அறிவிக்கும், அந்த அறிவிப்பில்தான் யார் தலைவர் என்பது தெரியவரும் என்றார் சுரேன்.

"அப்படியானால் இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக சம்பந்தன் இல்லை என்று கூறுகின்றீர்களா?" என்று அவரிடம் கேட்கப்பட்டதற்கு கூட்டமைப்பில் இருந்து தமிழ் அரசுக் கட்சி வெளியேறியதிலிருந்து அதன் பதவி நிலைகளும் வறிதாகி இருப்பதாகவே நாங்கள் கருதுகின்றோம் என்றார் அவர்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பில் சுரேன் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குத்து-விளக்குச் சின்னத்திலே போட்டியிடுகின்றது. தமிழ் மக்களுடைய ஒட்டுமொத்த தேசிய அரசியலை தொடர்ந்தும் கூட்டமைப்பாக முன்னெடுப்பதற்காக ஒன்றிணைந்த 5 கட்சிகளோடு சேர்ந்து பலமான ஒரு கட்டமைப்பாகப் பயணிக்கத் தொடங்கியிருக்கிறது.

இந்த நேரத்தில் நெடுந்தீவில் இருந்து பொத்துவில் வரைக்குமாக தமிழ் மக்களுடைய தாயகப் பிரதேசத்தில் இருக்கக்கூடிய அனைத்து பிரதேச சபைகளுக்கும் நகர சபைகளுக்கும் மாநகர சபைகளுக்கும் எமது வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளோம். நாங்கள் ஒரு மாவட்டத்தைச் சேர்ந்த அல்லது பிராந்தியத்தைச் சேர்ந்த கட்டமைப்பல்ல தொடர்ச்சியான பலமான ஒரு பரந்துபட்ட கூட்டமைப்பாகச் செயற்படுகின்றோம் என்பதை இது தெளிவுபடுத்தியுள்ளது.

வட்டாரச் சிந்தனைக்குள் வட்டாரத் தேர்தலுக்காக மாத்திரம் இந்தக் கூட்டமைப்பு உருவாக்கப்படவில்லை இது பலமான ஒரு தேசிய இயக்கமா இருப்பதற்கான நடவடிக்கையை இந்தக் கட்சிகள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும். இந்தத் தேர்த லானது கூட்டமைப்பிலிருக்கும்ஐந்துகட்சிகளுக்கான அல்லது இந்த குத்துவிளக்குச் சின்னத்திற்கான தேர்தல் மாத்திரமல்ல, இது தமிழ் மக்களுக்கான ஒரு தேர்தல் என்பதையும் அவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

தமிழ்த் தேசியப் பரப்பிலே செயலாற்றும் கட்சிகள் ஒற்றுமையாகவேண்டும் ஒன்றுபடவேண்டும் என்று தமிழ் மக்கள், பொது அமைப்புக்கள், சமூகக் கட்டமைப்புக்கள், புலம்பெயர் உறவுகள் எல்லோரும் தொடர்ச்சியா வலியுறுத்தி வருகின்றார்கள். ஆனால், தமிழ் அரசுக் கட்சி தனது வீட்டுச் சின்னத்தோடு பிரிந்து போயிருக்கின்றது. அதுபோன்று தேசியம் பேசுகின்ற சில கட்சிகள் தனித்து தங்கள் கட்சிச் சின்னத்திலே போட்டியிடுகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரம் 5 கட்சிகளை ஒருங்கிணைத்து ஒற்றுமையை நிலைநிறுத்தி இந்தத் தேர்தலைச் சந்திக்கின்றது.

ஒற்றுமையை வலியுறுத்தி வருகின்ற மக்களும் பொது அமைப்புக்களும் சர்வதேசமும் இந்தத் தேர்தலிலே தனித்து நிற்பவர்களுக்கு வாக்களிக்கப்போகிறார்களா? அல்லது ஒற்றுமையாக இருப்பவர்களுக்கு வாக்களித்து ஒற்றுமை என்ற மக்கள் கோரிக்கையை வலுப்படுத்தப் போகிறார்களா? இந்தத் தேர்தலின் முடிவுகள்தான் அதைத் தீர்மானிக்கப் போகின் றன. ஆகவே குத்துவிளக்குச் சின்னத்தின் வெற்றி எமது வெற்றி மாத்திரமல்ல ஒற்றுமைக்காகத் தமிழ் மக்கள் முன்வைக்கின்ற கோரிக்கைக்கான வெற்றி என்பதை தமிழ் மக்களும் இந்தத் தேர்தலில் தீர்மானிக்கக் கடமைப்பட் டிருக்கிறார்கள்.

ஒற்றுமை என்பதையும் ஒருமித்துச் செயற்படவேண்டும் என்பதையும் முன்வைக்கும் தரப்புக்களின் கோரிக்கையைச் செவிமடுத்து ஒரு பொதுச்சின்னத்திலே உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு வெற்றி பெறுவதன் மூலம்தான் தமிழ் இனத்தின் ஒற்றுமையை தமிழ் மக்கள் உறுதியாகப் பற்றி இருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்த முடியும் - என்றார்.

## வடக்கு........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்துப் பிக்குகளும் அழைக்கப்படவுள்ளதோடு அனுராதபுரத்திலிருந்தும் பிக்குகள் அழைத்துவரப்படவுள்ளனர். அதற்கு முன்னதாக வடக்கு மாகாண சபை முழுவதும் பௌத்த கொடிகளால் அலங்கரிக்கப்படவுள்ளது.

இந்த ஏற்பாடுகள் அனைத்தையும் வடக்கு மாகாண பிரதம செயலாளரே மேற் கொள்கிறார். என்று தெரிகின்றது. கடந்த வாரம் இது தொடர்பான ஆரம்பக் கூட்டம் நடைபெற்றுள்ளது. இதில் துறைசார் செயலாளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

வடக்கு மாகாணம் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் இடம். இதில் பௌத்த மதத்துக்கு மட்டும் முக்கியத்து-வம் வழங்குவது சர்ச்சையை ஏற்படுத்தியிருகின்றது. தமிழ் அரசியல் கட்சிகளும் இது தொடர்பில் கூர்ந்து கவனிக்கத் தொடங்கியிருக்கின்றன.

இந்த ஏற்பாடுகள் குறித்த விளக்கங்களை அறிந்து கொள்வதற்காக வட மாகாண பிரதம செயலருக்கு நேற்றிரவு அழைப்பெடுத்து அவரது கருத்தைப் பெற முயற்சித்தபோதும் காலைக்கதிர் பத்திரிகை என்று உச்சரித்ததுமே தனது தொடர்பைத் துண்டித்துவிட்டார்.

## கெரோயினுடன்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிராம் கஞ்சா போதைப்பொருளுடன் கைதாகியிருந்தார்.

சாவகச்சேரி மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி வே.ரஷிகரன் தலைமையிலான குழுவினர் குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

## தேர்தலை........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒத்திப்போடக்கூடும் என்பதால்தான் வழக்குஒன்றைத்தாக்குதல்செய்துள்ளோம். எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளோம்.

இந்தத் தேர்தல் ஏற்கனவே ஒரு வருடம் ஒத்திப்போடப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றம்என்னதீர்ப்பைவழங்கப்போகின்றது என்று பார்ப்போம்.

தேர்தலை ஒத்திப்போட்டால் அது நாட்டில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். வரலாற்றில் தேர்தலை ஒத்திப்போட்டதால்அப்படியானவிளைவுகளுக்கு நாம் சந்தித்துள்ளோம். அப்படி நடந்தால் அதன் பொறுப்பை அரசு ஏற்க வேண்டும்.

தேர்தலை ஒத்திப்போட்டால் சர்வதேச நாடுகள் இந்த அரசுக்கு எதிராகத் திரும்பும். பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருக்கும் நிலையில் சர்வதேச நாடுகளைப் பகைத்துக்கொள்வது நல்லதல்ல.

சர்வதேச நாடுகளின் உதவி நிச்சயம் தேவை. உதவி இல்லாமல், தனியாக எம்மால் எழுந்து நிற்க முடியாது. அந்த நாடுகள் கைகொடுக்க வேண்டும் - என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622





# உயரதிகாரிகளுக்கு நெருக்கடி கொடுத்து தேர்தலை ஒத்திவைக்க அரசு சதி முயற்சி!

## இம்ரான் எம்.பி. சாடல்

உயர் அதிகாரிகளுக்கு பொருளாதார ரீதியில் நெருக்கடிகள் கொடுத்து அவர்களைத் தூண்டி தேர்தலை ஒத்திவைக்க அரசு முயற்சிக்கின்றதுஎனதிருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு மேலும் கருத்து தெரிவித்துள்ளவை வருமாறு –

கடந்த 6 மாத காலத்தினுள் வாழ்க்கை செலவு 300 வீதம் அதிகரித்துள்ளது. எனினும், அரச உத்தியோகத்தர்கள் யாருக்கும் எவ்வித சம்பள அதிகரிப்பும் வழங்கப்படவில்லை.

எனவே, இந்தப் பாரிய சுமையை பல சிரமங்களுக்கு மத்தியில் அரச ஊழியர்கள் சுமந்து வருகின்றனர். இந்நிலையில் முன்னைய வரவு – செலவுத் திட்டத்தின் மூலம் பசில் ராஜபக்ஷ உயர் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட தொலைபேசி கொடுப்பனவில்25வீதம்குறைத்துள்ளார்.

எரிபொருள் கொடுப்பனவையும் குறைத்தார். இந்த குறைப்புகளால் ஏற்பட்ட பாதிப்புகளை சமாளித்துக்கொண்டு காலம் கடத்தும் நிலையில் இந்த உயர் அதிகாரிகளின் சம்பளம் மற்றும் இதரகொடுப்பனவுகளில்இருந்து வரி அறவிடும் திட்டத்தை இந்த அரசாங்கம் தற்போது அமுல் படுத்தவுள்ளது.

இதனால் எல்லா உயர் அதிகாரிகளும் பெருமளவு வரி மாதாந்தம் செலுத்த வேண்டியுள்ளது. இந்நிலையில் அவர்களுக்கு மாதாந்தம் வழங்க வேண்டிய சம்பளத்தையும் உரிய திகதியில் அல்லாமல் பிந்திக்கொடுக்கும் திட்டம் உள்ளதாக தற்போது அசாங்கம் அறிவிக்கின்றது.

இதன் பின்னணி என்ன? அரச உயர் அதிகாரிகளுக்கு தேவையற்ற சிரமங்களை ஏற்படுத்திஅவர்களைத்தூண்டும் சதி முயற்சியை இதன் மூலம் இந்த அரசாங்கம் முன்னெடுக்கின்றது என்பது மிகத் தெளிவாகும். சம்பளத்தில் வரி. இதர கொடுப்பனவுகளில் வரி. பாவிக்கும்அரசவாகனத்துக்குபெறுமதி வரி. வசிக்கும் விடுதிகளுக்கு பெறுமதி வரி. இப்படி அதிகாரிகளின்சட்டைப்பைக்குள்கையை வைத்து அவர்களது வருமானங்களை உறுஞ்சும் செயற்பாடு.

இது உயர் அதிகாரிகளின் தொழிற்சங்கங்களைத் தூண்டி அவர்களைப் பணிப்பகிஷ்கரிப்பு முயற்சியில் ஈடுபடவைத்து தேர்தல் நடவடிக்கைகளைச் சீர்குலைக்க எடுக்கப்படும் சதி முயற்சியாகும்.

தேர்தலுக்கு முகங்கொடுக்க அஞ்சி குலை நடுக்கத்தில் இருக்கும் அரசாங்கத்தால் தேர்தலை சட்ட ரீதியாக எவ்வகையிலும் ஒத்திவைக்க முடியாது. எனவே, வேறு எவ்வகையிலாவது ஒத்திவைக்க வேண்டும் என கங்கனம் கட்டும் இந்த அரசாங்கத்தின் ஒரு வகை சதி முயற்சி இதுவாகும்.

இவ்வளவு காலம் இல்லாத இந்த புதுமையான வரி முறைமையை அரசாங்கம் இப்போது அமுல்படுத்த துடிக்கும் நோக்கம் என்ன என்பதை அனைவரும் சிந்திக்க வேண்டும். சகல அரச உத்தியோகத்தர்களும், பொது மக்களும் இந்த அரசாங்கத்துக்கு சரியான பாடம் கற்பிக்கும் ஒரு தளமாக இந்தத் தேர்தலை அணுக வேண்டும். தமது வாக்குகளைப் பயன்படுத்தி இந்த அரசாங்கத்தை மிக மோசமாக தோல்வியடையச் செய்ய வேண்டும் என அவர் தெரி வித்துள்ளார்.

# தேர்தல் நடத்துவது, பிற்போடுவது முடிவுகள் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு கைகளிலே!

## நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ திட்டவட்டம்



உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது, பிற்போடுவது தொடர்பான தீர்மானத்தை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுஎடுக்க வேண்டும் என அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தேர்தல் நடவடிக்கையில் அரசாங்கம் தலையிடவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலை பிற்போடும் நோக்கில் தேர்தல் செலவீனம் ஒழுங்குபடுத்தல் சட்டம் இயற்றப்படவில்லை எனவும் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் ஊடாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மை உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட அரசாங்கம் சூழ்ச்சி செய்வதாக அரசியல் மட்டத்தில் குறிப்பிடப்படுகிறது.

தேர்தலை பிற்போடும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை எனவும் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# மஹிந்தவுக்கு இனிமேல் வெற்றி வாய்ப்பு இல்லை

## அடித்துக் கூறுகின்றார் கம்மன்பில

இதுவரை காலமும் மஹிந்தவின் நிழலில் நாம் வெற்றி பெறவில்லை. மஹிந்தவுக்குத்தான் நாம் வெற்றியைப் பெற்றுக் கொடுத்தோம். இனிமேல் மஹிந்தவுக்கு வெற்றிவாய்ப்பு இல்லை.

– இவ்வாறு புதிய ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெல்ல முடியாத நிலையில் இருந்தார் மஹிந்த ராஜபக்ச. அப்போது ஜாதிக ஹெல உறுமயவில் இருந்த நாங்கள் மஹிந்தவுடன் இணைந்து கடுமையாக உழைத்தோம். 50.1 என்ற வீதத்தில் மயிரிழையில் மஹிந்தவை வெல்ல வைத்தோம்.

அவர் விடுதலைப்புலிகளுடன்போர்செய்ய இருக்கவில்லை. சமாதானப் பேச்சு நடத்தவே இருந்தார்.

நான் வன்னிக் காட்டுக்குச் சென்று பிரபாகரனுடன் நேருக்கு நேர் பேச்சு நடத்துவேன் என்று 'மஹிந்த சிந்தனை'யில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாமே அவரைப் போரை நோக்கித்தள்ளினோம். போருக்கு ஆதரவானமக்கள்நிலைப்பாட்டை உருவாக்கினோம். போரின் வெற்றியை நோக்கி அவரை வழிநடத்தினோம். அவரை ஜனாதிபதியாக்கியதும் நாமே. போரை வெல்ல வைத்ததும் நாமே.

போரை வென்ற பிறகுதான் தேர்தல் கேட்டோம். இல்லாத மஹிந்தவை உருவாக்கிஅவருக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுத்த பின்பே தேர்தல் கேட்டோம்.

ஆகையால், மஹிந்தவின் நிழலில்நாம்வெற்றிபெறவில்லை. மஹிந்தவுக்குத்தான் நாம் வெற்றியைப் பெற்றுக்கொடுத்தோம் – என்றார்.

# ஐக்கிய நாடுகள் அகதிகள் அமைப்பின் வடக்கு களச் செயற்பாடுகள் நிறுத்தம்!

35 வருட சேவையின் பின்னர், ஐக்கிய நாடுகளின் அகதிகள் அமைப்பின் வடக்கு மாகாண அலுவலக களச் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன.

எனினும் இந்தியா மற்றும் பிற இடங்களில் இருந்து இலங்கை அகதிகளைத் தன்னார்வமாக திருப்பி அனுப்புவதற்கும், அவர்களை மீண்டும் ஒருங்கிணைப்பதற்கும் ஐக்கிய நாடுகள் அமைப்பு தொடர்ந்து வசதிகளை வழங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பலவந்தமாக இடம்பெயர்ந்தவர்களுக்கு அவர்களின் உரிமைகளைப் பெற்று நிரந்தர தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்கு ஆதரவளித்த 35 வருடகால பணியை முடிக்கும் வகையில், வடக்கில் களப்பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன என ஐக்கிய நாடுகளின் இலங்கை வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர் ஹம்டி தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும், இந்தியா மற்றும் பிற இடங்களில் உள்ள இலங்கை அகதிகளைதன்னார்வமாகதிருப்பி அனுப்புவதற்கும், மீண்டும் ஒருங்கிணைப்பதற்கும் தொடர்ந்து வசதிகளை ஐக்கிய நாடுகள் சபை வழங்கும்.

எஞ்சியுள்ள உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கு தீர்வு காண தொழில்நுட்ப ஆதரவையும் வழங்கும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கொழும்பு – நானுஓயா பஸ் கோர விபத்தில் சிக்கிய அறுவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றம்

நுவரெலியா – நானுஓயா பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்து தொடர்பில் மேலும் பல தகவல்கள் வெளியாகியுள்ளன.

நானுஓயா – ரதெல்ல பகுதியில் வெள்ளிக்கிழமை மாலை, கொழும்பில் இருந்து பாடசாலை மாணவர்களை ஏற்றி வந்த பஸ் ஒன்று வான் மற்றும் ஓட்டோ ஆகியவற்றுடன் மோதுண்டதில் ஏழு பேர் உயிரிழந்ததுடன் 51 பேர் படுகாயமடைந்திருந்தனர்.

இந்நிலையில், விபத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த 43 வயதுடைய ஒருவர் அன்று பிற்பகல் வீடு திரும்பியுள்ளார் என நுவரெலியா வைத்தியசாலையின் பணிப்பாளர் மகேந்திர சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் 6 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனவும், 4 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பஸ் விபத்தின் பின்னர், நானுஓயா, ரதெல்ல குறுகிய வீதியில் கனரக வாகனங்கள் செல்வதற்காக தற்காலிகமாக தடைவிதிக்கப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து மாணவர்களை சுற்றுலாவிற்கு ஏற்றிச்சென்ற பஸ் மீது வான்மோதியதில்வானில்பயணித்த 9 பேரில் ஆறு பேரும், பின்னால் வந்த ஓ;ட்டோ சாரதியும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

கொழும்பு – நானுஓயா பேருந்து விபத்து – ஆறு பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றம் ரேறயசய நுடலைய யேரெழலய யுஉஉனைநவெ

இந்த விபத்தில் நானுஓயா பகுதியில் சுயதொழில் ஈடுபடும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் உட்பட 13 வயது சிறுவன், 26 மற்றும் 27 வயதுடைய 3 ஆண்கள், 8 மற்றும் 12 வயதுடைய இரண்டு சிறுமிகள் மற்றும் 43 வயதுடைய பெண் ஒருவரும் உயிரிழந்திருந்தனர்.

இந்த விபத்தில் உயர்தரப் பரீட்சைக்கு தயாராகிக்கொண்டிருந்த மற்றுமொரு பாடசாலை மாணவி தற்போது நுவரெலியா பொது வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார். பஸ் விபத்துக்குள்ளான போது பஸ்ஸில் கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரியின் 11ஆம் ஆண்டு மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என 42 பேர் உட்பட 53 பேர் பயணித்துள்ளனர்.

பஸ்ஸில் இருந்த மாணவர்களும், வான் மற்றும் ஓட்டோவில் பயணித்தவர்களும் பாதுகாப்புப் படையினர் மற்றும் பிரதேசவாசிகளின் உதவியுடன் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவித்த பொலிஸ் ஊடகப்பேச்சாளர் நிஹால் தல்துவா –

'இந்தப் பஸ்ஸின் சாரதி ஹொரண பிரதேசத்தைச் சேர்ந்த 62 வயதுடையவர். விபத்துக்கான சரியான காரணம் இதுவரை அறிய முடியவில்லை. பஸ்ஸின் சாரதியும் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பஸ்ஸில் அலட்சியங்கள் உள்ளன. ஆனால் உறுதியாக எதனையும் கூறமுடியாது. தொழில்நுட்பக் கோளாறா? அல்லது வேறு ஏதேனும் காரணம் உண்டா என்பது தொடர்பில் விசாரணை அதிகாரிகள் தெளிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இலங்கையின் சுதந்திரத்தை தமிழர் மீது திணிக்காதீர்கள்

இலங்கையின் சுதந்திரதினம் பெப்ரவரி 4ஆம் திகதி கொண்டாடப்படஉள்ளது. அதற்கிடையில்தமிழர்களுடனான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் என்றும், இனப் பிரச்சினைக்கான தீர்வைக் காண முடியுமா இல்லை என்பதையாவது அந்தத் தினத்தில் தெரிவிக்க முடியும் என்றும் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவத்திருந்தார்.

அதனடிப்படையில் இரண்டு தடவைகள் அனைத்துக் கட்சிக் கூட்டங்களும் சில தடவைகள் தமிழ்த் தரப்பினருடனான கூட்டங்களும் நடததப்பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றின் மூலம் எந்தவொரு முன்னேற்றகரமான அடைவையும் இதுவரை எட்ட முடிந்திருக்கவில்லை.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது என்பது தீர்வு ஒன்றைக் காண்பதற்கான நம்பிக்கையை ஏற்படுத்தும் ஒரு படிநிலையாகத்தான் தமிழ்த் தரப்பினரால் அரசுடனான பேச்சில் முன்வைக்கப்பட்டது. ஆனால், அதைக்கூடச் செய்வதற்கு இரண்டு வருட கால அவகாசம் தேவைப்படும் என்று யாழ்ப்பாணத்தில் நடந்த பொங்கல் விழாவில் ரணில் தெரிவித்துவிட்டார். அதாவது பிரச்சினைகளுக்கு ரணில் தீர்வு காண்பார் என்கிற நம்பிக்கையைத் தமிழர்கள் பெறுவதற்கான நடவடிக்கைக்கு இரண்டு வருட காலம் செல்லும்.

அதன் பின்னர் இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரின் பயணத்தை அடுத்து தூசு தட்டப்பட்டது 13. அதில் உள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கான பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன என்கிற சார்பான அறிக்கை அப்போது ரணிலால் முன்வைக்கப்பட்டது. ஆனால், அதற்கு முன்னர் நிறைவேற்றப்படவேண்டிய காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமற்போனவர்களுக்கான தீர்வு என்று எவற்றுக்கும் முடிவு இல்லை.

யாழ்ப்பாணம் வந்திருந்தபோது, படையினர் வசமுள்ள 108 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படும் என்றார் ரணில். ஆனால் இன்னும் அதில் ஒரு ஏக்கர் காணிகூட விடுவிக்கப்படவில்லை. இப்போது அதை விட்டுவிட்டு வனவளத்திணைக்களம், வன உயிரிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் என்பவற்றின் வசம் உள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

குருந்தூர்மலை, தென்னமரவாடி போன்ற இடங்களில் இந்தத் திணைக்களங்கள் கையகப்படுத்தி நிலங்கள் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்படவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்திருந்தார்கள். அங்கே கற்கள் நடப்பட்டுள்ளனவே தவிர அவை உண்மையில் அரசுடமையாக்கப்படவில்லை என்பதே அவர்கள் தெரிவித்த கருத்து. அப்படியானால் அந்தக் கற்களைப் பிடுங்கிவிட்டு நிலங்களை விடுவியுங்கள் என்று தெரிவிக்கப்பட்டதற்கு, இன்னும் நடவடிக்கை இல்லை. அதைச் செய்வதற்கு அமைச்சரவைப் பத்திரமும் அவசியமில்லை. அமைச்சரவையைக் கேட்காமல் நடப்பட்ட கற்களை அகற்றுவதற்கு அமைச்சரவையின் முடிவு அவசியமில்லைத்தானே?

இப்படி எந்தவொரு விடயத்திலும் சிறிய முன்னேற்றத்தைக்கூட காட்டாத நிலையில் சுதந்திர தினத்தை வடக்கில் முழு பௌத்த மயமாக்கலுடன் நடத்துவதற்கு எடுக்கப்படக்கூடிய எந்தவொரு நடவடிக்கையும் கடும் கண்டனத்திற்குரியது முழு எதிர்ப்புக்குரியது. தமிழர்களும் இந்த நாட்டின் சமமான குடிமக்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் கொழும்பு அரசு நடந்துகொண்ட பின்னர்தான் இங்கு சுதந்திர தினத்தைக் கொண்டாட முடியும். அதுவும் மக்களாக அதனைக் கொண்டாட வேண்டுமே தவிர அரசு திணிக்கக்கூடாது.

# தமிழ்த் தரப்புகளுடனான பேச்சுகள் வெற்றியளிக்கும்!

## அரசு நம்புகிறது என்கிறார் அலி சப்ரி



அரசமைப்பில் உள்ள 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளதோடு, எதிர்காலத்தில் காணி அபகரிப்புக்களை நிறுத்துவதற்குரிய பணிப்புரைகள் விடுக்கப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம், தமிழ்த் தலைவர்களுடனான பேச்சுகள் முன்னேற்றகரமாக இடம்பெறுகின்றன எனவும் பிரச்சினைகளுக்கு தீர்வை அளிக்க வேண்டும் என்பதில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, இனப்பிரச்சினை தீர்வு மற்றும் தமிழ்த் தரப்புடன் முன்னெடுக்கப்பட்டு வரும் பேச்சுகள் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நீடித்துக்கொண்டிருக்கும் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காண வேண்டும் என்பதில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகுந்த கரிசனையுடன் இருக்கின்றார். அந்த வகையில், தற்போது 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க ஆரம்பித்துள்ளது.

மேற்படி சட்டத்தை அமுலாக்குவதில் உள்ள நடைமுறைப்பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் சம்பந்தமாகக் கவனத்தில் கொள்ளப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதேவேளை, பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் கையகப்படுத்துகின்றன எனத் தொடர்ச்சியான குற்றச்சாட்டுக்கள் உள்ளன. வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இந்தக் குற்றச்சாட்டுக்கள் அதிகமாக உள்ளன.

இந்நிலையில், மேற்படி வியடம் சம்பந்தமாக அரசாங்கம் கவனத்தில் கொண்டு, எதிர்காலத்தில் காணிகளைக் கையகப்படுத்தும் செயற்பாடுகளை முற்றாக கைவிட வேண்டும் என்று பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், தமிழ்த் தரப்புக்களுடன் தொடர்ச்சியாக பேச்சுக்களை முன்னெடுத்து வருகின்றோம். இந்தப் பேச்சுக்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளன.

அந்தப் பேச்சுகள் முன்னேற்றகரமாக உள்ளன. அவை வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. – என்றார்.

# நானுஓயாவில் விபத்தான பஸ் உரிமம் பெற்ற வாகனம் அல்ல!

## கெமுனு விஜேரத்ன இப்படிக் கூறுகிறார்



நானுஓயா – ரடெல்ல துர்கா வீதியில் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற கோர விபத்தில் சிக்கிய பஸ், தனியார் பஸ்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட அல்லது இயங்கும் உரிமம் பெற்ற பஸ் அல்ல என அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த பஸ் இதற்கு முன்னர் பாதை இலக்கம் 280 மற்றும் 315 இல் இயங்கி வந்ததாகவும், ஆனால் பஸ்ஸின் உரிமையாளர் வெளிநாடு சென்றுள்ளமையால் குறித்த பாதையில் இருந்து நீக்கப்பட்டு விசேட பயணங்கள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இதன்போது தெரிவித்துள்ளார்.

இந்த நாள்களில் பல பாடசாலைகளில் கல்விச் சுற்றுலாவிற்கு பிள்ளைகளை அழைத்துச் செல்லுமாறு தமது சங்கம் பணித்துள்ளதாகவும், உடற்தகுதி சான்றிதழ், அனுமதிப் பத்திரம் மற்றும் பஸ்ஸின் காப்புறுதிச் சான்றிதழ் போன்ற மிக முக்கியமான ஆவணங்களை சமர்ப்பித்தால் மாத்திரமே தமது சங்கம் பஸ்களை அனுப்புவதாகவும் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த விபத்துக்கான முழுப் பொறுப்பும் பஸ்ஸின் சாரதிக்கே உரித்தாக்கப்பட வேண்டுமெனவும், குறித்த பேருந்து இரவு நேர விடுதியாக அமைக்கப்பட்டுள்ளதாகவும் கெமுனு விஜேரத்ன இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், பணயங்களுக்கு பஸ்ஸைத் தெரிவு செய்யும் போது பாடசாலையின் அதிபர் மற்றும் ஆசிரியர், ஊழியர்கள் பஸ்ஸின் தரம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தவேண்டுமெனவும் கெமுனு விஜேரத்ன குறிப்பிட்டுள்ளார்.

# தலவாக்கலை - மிடில்டன் தோட்ட மக்களை வீடுகளை உடன் புனரமைக்க நடவடிக்கை!

## அமைச்சர் ஜீவன் உறுதி

தலவாக்கலை, மிடில்டன் தோட்டத்தில் ஏற்பட்ட தீ விபத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வீடுகளை உடனடியாக புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான ஜீவன் தொண்டமான் பணிப்புரை விடுத்துள்ளார். நேற்று (ஞாயிற்றுக்கிழமை) தலவாக்கலை, மிடில்டன் தோட்டத்துக்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தீ விபத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளை பார்வையிட்டதுடன், சேத விவரங்களையும் கேட்டறிந்ததோடு மக்களுக்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுக்குமாறு பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் மற்றும் தோட்ட நிர்வாகத்துக்கும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் பணிப்புரை விடுத்துள்ளார். மேற்படி தோட்டத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 07 வீடுகள் முற்றாக தீக்கிரையாகியுள்ள நிலையில் 05 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பாதீடு தோற்கடிக்கப்பட்டுள்ளமையால் குருநாகல் மேயர் பதவி வறிதாகியது!

## வர்த்தமானியும் வெளியானது



குருநாகல் நகர மேயர் துசார சஞ்சீவ பதவி நீக்கம் செய்யப் பட்டுள்ளார்.

வடமேல் மாகாண ஆளுநர் வசந்த கரன்னாகொட வர்த்தமானி மூலம் இதனை அறிவித்துள்ளார்.

குருநாகல் மாநகர சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் நிறைவேற்றப்படாமையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ஆளுநர் தெரிவித்துள்ளார்.

# இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் இரண்டு வேட்புமனுக்கள் நிராகரிப்பு!

உள்ளூராட்சிமன்ற தேர்தலில் பதுளை மாவட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தாக்கல் செய்த வேட்புமனுக்களில் இரு சபைகளுக்கான வேட்புமனுக் கள் நிராகரிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின் றது. ஹாலிஎல மற்றும் ஹப்புத்தளை ஆகிய பிரதேச சபைகளுக்கான வேட்பு மனுக்களே இவ்வாறு நிரா கரிக்கப்பட்டுள்ளன. பதுளை மாவட்டத்தில் 141 அரசி யல் கட்சிகளும், 21 சுயேச்சைக்குழுக்களும் வேட்பும னுக்களை தாக்கல் செய்துள்ளன.

இவற்றில் 11 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட் டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.





# கைதடியில் சிறுவர் பூங்கா திறப்பு

தென்மராட்சி, ஜன 23

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட கைதடிப் பிரதேசத்தில் நீண்ட நாள் எதிர்பார்ப்பாக காணப்பட்ட சிறுவர் பூங்கா தைப்பொங்கல் தினத்தன்று திறந்து வைக்கப்பட்டது.

சாவகச்சேரிப் பிரதேச சபையின் கைதடி உபபணிமனைப் பொறுப்பதிகாரி ச.கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக அமெரிக்காவில் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை நிபுணராக கடமையாற்றும் வைத்தியர் த.தவச்சேந்தன் கலந்து சிறப்பித்தி ருந்தார். இவர் கைதடியைச் சொந்த இடமாகக் கொண்டவர்.

மேலும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரிப் பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் கலந்துகொண்டிருந்தார்.

தனியார் ஒருவரால் கைதடி கிராமசபைக்கு வழங்கப்பட்ட காணியில், பசுந்தேசம் அமைப்பின ரின் முயற்சியின் பயனாக இந்தச் சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டது.

# போதைப்பொருள் வியாபாரியை கைதுசெய்யகோரி வாழைச்சேனையில் நேற்று தனிநபர் போராட்டம்!



வாழைச்சேனை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக போதைப் பொருள் வியாபாரியை கைது செய்யுமாறு கோரி தனிநபர் ஒருவரால் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள் ளது. ஓட்டமாவடி, மீராவோடை பகுதியைச் சேர்ந்த சேகு இஸ்மாயில் முகம்மது நஸ்லி என்பவரே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்.

இவர், அப்பகுதியில் உள்ள வீடொன்றில் போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதாகவும், அந்த வியாபாரி பல முறை கைது செய்யப்பட்டு விடுதலையான வர் என்றும் தெரிவிக்கிறார்.

தற்போது நாட்டில் அதிக ரித்து வரும் போதைப்பொருள் விற்பனை மற்றும் அதன் பாவ னைகளைக் கட்டுப்படுத்தி, இளைஞர்களைப் பாதுகாக்க வேண்டியே, தனிநபராக நின்று இந்த போராட்டத்தை நடத்துவ தாக அவர் மேலும் தெரிவிக் கிறார். 'மீராவோடை பிரதேசத்தி லும் போதையை ஒழிக்க வியா பாரிகளைகைதுசெய்','எங்களது இளைஞர் சமூகத்தின் எதிர் காலத்தை பாதுகாக்க நடவ டிக்கை எடுங்கள்', 'அரசே! பொலிஸாரே! தயவுசெய்து அவ சரமாக நடவடிக்கை எடுங்கள்' எனும் வாசகங்கள் அடங்கிய அட்டையினை ஏந்தியவாறு அந்த நபர் போராட்டத்தில் ஈடு பட்டுள்ளார்.

இதனை தொடர்ந்து அந்த இடத்துக்குச் சென்ற பொலி ஸார், போராட்டத்தை மேற் கொள்ளும் நபரிடம் பேச்சில் ஈடுபட்டு, மேற்படி விடயம் தொடர் பில் கவனம் செலுத்துவதாக தெரிவித்துள்ளனர்.

## வாக்குச் சீட்டு தயாரிக்கும் பணிகள் நேற்று ஆரம்பம்!

வாக்குச் சீட்டு தயாரிக்கும் பணிகள் நேற்று (ஞாயிற் றுக்கிழமை) முதல் ஆரம் பிக்கப்படவுள்ளது.

அந்தந்த உள்ளூராட்சி ம ன்றங்களுக்கான வேட்பும னுக்களை முறையாகக் கையளித்த அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் தொடர்பான தகவல்கள் இறுதி செய்யப்பட்டுள்ள நிலையி லேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதற்கமைய 340 உள் ளூராட்சி மன்றங்களுக்கும் தனித்தனியான வாக்குச் சீட்டு கள் தயாரிக்க திட்டமிடப் பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள் ளது.

இவ்வாறு திட்டமிடப்பட்ட வாக்குச் சீட்டுகள் அச்சடிக்க உடனடியாக அரச அச்சகத் திற்கு அனுப்பி வைக்கப்படவுள் ளன.



# சிறப்புற நடந்த சைவப் புலவர் பட்டமளிப்பு விழா











தென்மராட்சி, ஜன. 23


அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் வைரவிழாவையொட்டி நடத்தப்பட்ட சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும்–சைவ மாநாடும் ஞாயிற்றுக் கிழமை சாவகச்சேரி பூமாரி மண்டபத்தில் இரு அமர் வுகளாக இடம்பெற்றன.

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் தலைவர் சி.கா.கமலநாதன் தலைமையில் இடம்பெற்ற காலை அமர்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல் கலைக்கழக துணைவேந்தர் எஸ்.சற்குணராஜா கலந்து சிறப்பித்திருந்தார்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர், திருக்கேதீஸ்வரம் குமரபுர ஆதீன தம்பிரான் சுவாமிகள் மற்றும் யாழ்ப்பாணம் ஸ்ரீ சிவகுருநாத வேதாந்த பீட குரு பீடாதிபதி ஆகியோரின் ஆசிகளுடன் தொடங் கியது. வைரவிழாவை ஒட்டி தயாரிக்கப்பட்ட சைவநாதம் மலர் வெளியீடு,சைவப் புலவர்கள் மற்றும் இளஞ் சைவப் புலவர்களுக்கான பட்டமளிப்பு என்பன தொடர்ந்து இடம்பெற்றன. வைரவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட திறன் விருத்திப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளும் வழங்கப்பட்டன.

சங்கத்தின் உபதலைவர் சி.ஞானசூரியர் தலைமை யில் இடம்பெற்ற மாலை அமர்வில் யாழ்ப்பாண பல் கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்திருந் தார். மேலும் நிகழ்வில் சமூகசேவகர் சிவராசா,தென்ம ராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கிருபாகரன், பேராசிரியர்கள்,இந்து மத குருமார்கள்,சைவப் புலவர் கள்,பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.





# கிளிநொச்சியில்
# ஐஸ்வர்யம்
# பெருவிருந்து மண்டபம்
# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL
## BANQUET MEALS HALL





**FULL OPTION**

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |


**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

# வேலன்சுவாமிகள் கைது அரசின் கொடுஞ் செயல்!

## சீமான் சீற்றம்



இலங்கை அரசின் இனவெறி செயற்பாடுகளுக்கு எதிராகப் போராடிய இலங்கை மத தலைவர் வேலன் சுவாமிகளைக் கைதுசெய்தமை அடிப்படை மனித உரிமைகளைப் பறிக்கும் கொடுஞ்செயல் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கண்டனம் தெரிவித்துள்ளார்.

யாழ். நல்லூர் சிவகுரு ஆதீனத்தின் முதல்வரும், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளருமான தவத்திரு வேலன் சுவாமிகள் கைது செய்யப்பட்டமை தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

யாழில் இடம்பெற்ற தமிழர்களின் தேசிய திருவிழாவான தை திருநாளில் இலங்கை அதிபர் கலந்து கொள்வதற்கு எதிப்பு தெரிவித்து போராட்டம் நிகழ்த்திய தவத்திரு வேலன் சுவாமிகளை இலங்கைப் பொலிஸார் கைது செய்தமை வன்மையான கண்டனத்துக்குரியது.

மேலும், இலங்கை அரசின் இனவெறி செயற்பாடுகளுக்கு எதிராகப் போராடும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீது இலங்கையின் முப்படையினர் அடக்குமுறைகளைப் பிரயோகித்து வழக்குகள், கைதுகள் மூலம் ஒடுக்கு வதும், அரசியல் அதிகாரங்களைப் பயன்படுத்தி தமிழ் மக்கள் மீது தாக்குதல் தொடுப்பது என இலங்கை இனவாத அரசால் அடிப்படை மனித உரிமைகளைப் பறிக்கும் செயல்கள் தொடர்ந்தும் நடந்து வருகின்றன எனவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

இலங்கையில் எந்த அரசு ஆட்சி அமைத்தாலும், யார் ஆட்சித் தலைவராக வந்தாலும் தமிழர்களுக்கு எதிரான இனவெறிக் கொடுமைகள் நிறுத்தப்படா என்பதை வேலன் சுவாமிகளின் கைது உணர்த்துவதாக அவர் தெரிவித்துள்ளதுடன், ஒரே நாட்டுக்குள் தமிழர்களை ஒன்றிணைத்து வாழ்வது என்பது சாத்தியமற்றது என இப்போதாவது உலகநாடுகளும், ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களும் புரிந்து கொள்ள வேண் டும் என சீமான் தனது கண்டன அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

# மஹிந்த – கோட்டாமீது பொருளாதார தடைகளை விதிக்க ஜி – 7 நாடுகளை ஒன்று திரட்டும் கனடா!



முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் மேலும் இரு இராணுவ அதிகாரிகள் மீது மேலும் பொருளாதார தடைகளை விதிக்கும் நோக்கில், ஜி – 7 நாடுகளை ஒன்று திரட்டுவதற்கு கனடா செயற்பட்டு வருவதாக கனேடிய வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலி தெரிவித்துள்ளார்.

அண்மையில், இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் போது மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தி முன்னாள் ஜனாதிபதிகள் உட்பட நால்வர் மீது கனடா தடைகளை விதித்துள்ளது.

ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

**கேள்வி:** ஜனவரி 10 அன்று நான்கு இலங்கையர்களுக்கு எதிராக விதிக்கப்பட்ட தடைகளுக்கான காரணம் மற்றும் காலக்கெடு தொடர்பாக இன்னும் தெளிவான யோசனை இல்லை.

**பதில்:** நாங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு இது சம்பந்தமாக நடவடிக்கைகளை எடுத்தோம், மேலும் நீதியை நடைமுறைப் படுத்துவதில் கவனத்துடன் இருந்தோம். கனடா எப்போதும் மனித உரிமைகளைப் பாது காப்பதற்காகச் செயற்படுகிறது.

மேலும், கனடா பல வருடங்களாக சர்வதேச ரீதியில் பொறுப்புக்கூறலை கேள்விக்குள்ளாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அதனால்தான் ராஜபக்ஷ சகோதரர்கள் மற்றும் மற்றவர்கள் மீது கடுமையான தடைகளை விதிக்க முடிவு செய்துள்ளோம்.

'இதன் மூலம், கனடாவில் உள்ள அவர்களது சொத்துக்கள் தடை செய்யப்படும், மேலும் அவர்கள் கனடாவுக்குள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

மேலும், இது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜி – 7 நாடுகளை ஊக்குவிப்பதே எங்கள் நோக்கம்.

**கேள்வி:** 'இலங்கையின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை விட, உக்ரைன் போன்ற நாடுகளின் பிரச் சினைகளைத் தீர்ப்பதற்குப் பாடுபடுவதன் மூலம் ஜி – 7 நாடுகளின் உறுப்பினர்கள் அதிக நன்மைகளைப் பெற்றுள்ளனர். இந்த பிரச்சினையில் ஜி – 7 உறுப்பினர்களை ஈடுபடுத்துவது தாக்கத்தை ஏற்படுத்துமா?

**பதில்:** அதுதான் எனது இலக்கு. நான் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன். இலங்கையில் உள்ள தமிழ் சமூகம் இது தான் பிரச்சினை என்று தெரியும். சமாதானத்தை அடைய, உண்மையைச் சுட்டிக்காட்ட வேண்டும் என்பதை அவர்கள் அறிவார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

# ஒற்றுமையுடன் நாம் செயற்பட்டால் அதிக வட்டாரங்கள் கைப்பற்றலாம்!

## சாணக்கியன் நம்பிக்கை



ஒற்றுமையுடன் செயற்பட்டால் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிக வட்டாரங்களை கைப்பற்ற முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர் –

மழையுடன் ஆரம்பித்துள்ள பல நிகழ்வுகளை வெற்றிகரமாகவே முடித்துள்ளோம். இதற்கு சிறந்த உதாரணமாக, பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியைக் குறிப்பிடலாம். தமிழரசு கட்சி சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தாக்கல் செய்யப்பட்ட எந்தவொரு வேட்பு மனுவும் நிராகரிக்கப்படவில்லை.

குறிப்பாக சொல்லப்போனால், இந்த தேர்தலைப் பொறுத்தவரையில், அதிகளவான உள்ளூராட்சி சபைகளில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 76 வட்டாரங்களில் வெற்றிபெற்ற எமக்கு, இம்முறை 100 இற்கும் மேற்பட்ட வட்டாரங்களில் தமிழரசுக் கட்சி வெற்றி பெறும் என்ற நம்பிக்கை உள்ளது. அதற்கு அனைவரது ஒத்துழைப்பும் தேவை.

கடந்தகாலங்களில் பங்காளிக் கட்சிகளுடன் இணைந்து போட்டியிட்டபோதும், ஆட்சியமைப்பதில் பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுத்திருந்தோம்.

எனினும், எங்களுடைய தந்திரமான நடவடிக்கை காரணமாக இம்முறை எந்தவொரு ஒட்டுக்குழுவின் ஆதரவும் இல்லாமல் ஆட்சியமைக்கக்கூடிய சூழல் உருவாகியுள்ளது. அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

### உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான பாதுகாப்பு வழங்க பொலிஸார் மறுப்பு!

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான போதிய பாதுகாப்பை தற்போது கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களிடமிருந்து வழங்க முடியாது என பொலிஸ் திணைக்களம், தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளது.

தேர்தல் பாதுகாப்பு தொடர்பில் பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் துறையின் மொத்த ஊழியர்கள் 85 ஆயிரம் பேர் என்றாலும், அவர்களில் 60 ஆயிரம் பேரை மட்டுமே தேர்தல் பணிகளுக்காக விடுவிக்க முடியும் என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன் கடந்த தேர்தலில் 78 ஆயிரம் பொலிஸார் தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இந்நிலைமை காரணமாக ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரிகளை மீள அழைத்து தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு பொலிஸ் திணைக்களம் மேற் கொண்டுள்ள ஏற்பாட்டின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அனுமதி கோரப்பட்டுள்ளது.

மேலும், தேர்தல் பாதுகாப்புக்காக பாதுகாப்புப் படையினரை அழைக்கவும் முன்மொழியப்பட்டுள்ளது. அரசியல் சட்டப்பிரிவு 104 சி(1) இன்படி தேர்தலுக்கு பொலிஸார் பாதுகாப்பு அளிக்க கடமைப்பட்டுள்ளதால் தேர்தல் பாதுகாப்புக்கு பொலிஸாரின் அதிகபட்ச பங்களிப்பு எதிர்பார்க்கப்படுகிறது என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

# எவரையும் கட்சியிலிருந்து விரட்டியமை கிடையாதாம்!

## ரவூப் ஹக்கீம் கூறுகிறார்



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவர் என்ற வகையில் நானாக யாரையும் கட்சியிலிருந்து விரட்டியமை கிடையாது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வை கட்சியில் இணைத்துக் கொண்டமை போன்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ். எஸ்.அமீர் அலியை இணைத்துக் கொள்வீர்களா என்று ஓட்டமாவடி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எஸ்.ஐ.முகாஜிரீன் கேட்டதற்கே ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில் –

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை தாய்வீடாகக் கருதும் யாருக்கும் இந்தக் கதவு திறந்திருக்கும். அதில் எந்த சந்தேகமும் கிடையாது.

ஆனால், அவர்கள் இணைய விரும்புகின்ற போது இந்தக் கட்சியின் பாரம்பரியத்துக்கமைய, கட்சியில் இருக்கும் அனைத்து முக்கியஸ்தர்களுடனும் கலந்து ரையாடியதன் இறுதியில் சாத்தியமான முடிவை எடுக்கலாம்.

எதிர்காலத்தில் கட்சியில் யாரும் இணைய விரும்பினால், அது தொடர்பாகப் பரிசீலித்து இணைக்கப்படுவார்கள். – என்றார்.

# ஏ.எல். மாணவர்களுக்காக விசேட ரயில் சேவைகள்!

2022ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சைகள் இன்று(திங்கட்கிழமை) முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

அதற்கமைய பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு போக்குவரத்து வசதிகளை ஒழுங்குபடுத்தும் வகையில் ரயில்வே திணைக்களம் முக்கிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அதன்படி மலைநாட்டு ரயில் பாதையின் ஊடாக 16 விசேட ரயில் சேவைகள் மாணவர்களின் நலனை கருத்திற்கொண்டு இயக்கப்படவுள்ளன.

அதேநேரம் கரையோர மார்க்கமாக 14 ரயில் சேவைகள் இயங்கவிருக்கின்றன எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# புதிய கொரோனா விதிமுறைகள் சுற்றுலா பயணிகளுக்கு இல்லை!

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு தற்போதைக்கு புதிய கொரோனா விதிமுறைகளை விதிக்க வேண்டிய அவசியமில்லை என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இது தொடர்பில் இறுதி இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக அதன் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார். இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, சுகாதார அதிகாரிகள் மற்றும் சுற்றுலாத் துறை நிறுவனங்களுடன் நடத்திய கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு புதிய கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்த சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை கடந்த 17 ஆம் திகதி திட்டமிட்டிருந்தது. பின்னர் அது 20 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது. எவ்வாறாயினும், தற்போதைய நிலைவரத்தை கருத்திற்கொண்டு புதிய சட்டமொன்றை அமுல்படுத்த வேண்டிய அவசியமில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 246

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## பாதுகாப்பும் திருமலையும்



இந்தியாவின் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தனது 20 ஜனவரி 2023 ஊடக அறிக்கையில், தனது இலங்கை வரவு, முக்கியம் பெற வேண்டும் என்ற தனது நாட்டின் பிரதமர் மோடியின் கொள்கைப்பாட்டில் ஸ்ரீலங்கா தற்சமயம் எதிர் கொள்ளும் பொருளாதார நெருக்கடிகளுக்கு பொறுப்பும் அக்கறையும் ஐக்கியமும் காட்டுவதே முதன்மையானது என்றார். இதுவரை தரப்பட்ட இந்தியாவின் நான்கு பில்லியன் டொலர் உதவியையும், சர்வதேச நிதி நிறுவனத்திற்கு இந்தியா தரவேண்டிய கடன்களுக்கான மீள் சீரமைப்பு பத்திரங்கள் அளிக்கப்பட்டமையையும் குறிப்பிட்டு, நாடு பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீள்வதற்கு அதனது மீள் உருவாக்கப்படக்கூடிய எரிசக்திகள் (Re-newable energy), சுற்றுலாத்துறை, அடித்தள ஆதார கட்டமைப்புகள் போன்ற துறைகளில் முதலீடு செய்யப்பட வேண்டும் எனவும் அதற்கான ஊக்கங்களை இந்திய முதலீட்டு நிறுவனங்கள் இடையேயும் ஏற்படுத்துவதாகவும் அறிவித்தார்

எரிசக்தி உருவாக்கத்தில் ஸ்ரீலங்காவுக்கு பெரும் வாய்ப்புகள் உள்ளன எனவும், அதனை பிராந்தியத்தில் உள்ள நாடுகளுடன் ஈடுபட்டு செய்வது உசிதம், அதற்குத் திருவோணமலை கேந்திரமாக பயன்படலாம் எனவும் கருத்து கூறினார்.

1987 இல் திருகோணமலையில் அமைந்திருந்த எண்ணெய் குதங்கள் அமெரிக்கக் கம்பெனிக்கு தரப்படுவதில் எழுந்த பிரச்சினை பாதுகாப்பு எனச் சுழன்று, தற்சமயம் திரும்பவும் பாதுகாப்பு காரணங்களில், பொருளாதார நெருக்கடியில், இந்தியாவின் கட்டுப்பாடுகளுக்குள் வருகிறது.

காங்கிரஸ் ஆட்சியில் இருந்த பொருளாதாரக் கொள்கைகள் அல்ல, மாறாக, காந்திய கிராமிய அபிவிருத்தித் திட்டங்களில் இருந்து வேறுபட்டு, பெரும் தொழில் அடிப்படைகளில் இந்தியாவை சர்வதேசத்தின் மூன்றாம் இடத்திற்கு முன்னேற்றுகின்றது. இந்தப்போட்டிகளில் அமெரிக்கா, சீனா, ரஷ்யா போன்றே மனித உரிமைகள், பசுமை கோட்பாடுகள் போன்றவை இரண்டாம் பட்சமாகின்றன.

இனப்பிரச்சனை பற்றி அவர் கூறும் போது, இந்தியா எப்பொழுதுமே அரசியல், பொருளாதாரப் என்று இரண்டிலுமே ஸ்ரீலங்கா ஸ்திரத்தன்மை அடைவதற்கு ஆதரவு தருவதாகவும், ஜனாதிபதி ரணில் அரசியல் தீர்வு பற்றிய எண்ணங்களை தன்னுடனும் பேசிய பொழுது, இந்தியாவை பொறுத்தவரை 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதும் மாகாண சபை தேர்தல்களை விரைந்து நடத்துவதும் தான் தேவையானவை எனத் தாம் கூறினார் எனவும் குறிப்பிட்டார்.

அடுத்து நிலைத்திருக்கக்கூடியதான நல்லிணக்கத்திற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் எல்லா இனத்தவர்களுக்கும் பிரயோசனமாகும் அதே சமயம், இந்திய வம்சாவளித் தமிழ் மக்களை பொறுத்தமட்டிலும் முக்கிய கவனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கூறப்பட்டது.



போர் குற்றங்கள், அவற்றுக்கான விசாரணைகள், வலிந்து காணாமல் ஆக்கப் பட்டோர், மஹிந்த பேசிய 13 பிளஸ் பற்றி எல்லாம் ஜெய்சங்கர் எதுவும் குறிப்பிடவில்லை.

மஹிந்தவை கனடிய அரசு போர்க் குற்றங்களோடு தொடர்பு படுத்தி அவருக்கும் கோட்டாபயவுக்கும் எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதித்திருந்தாலும், மஹிந்தவோடு பிரத்தியேக சந்திப்பு ஒன்றை நிகழ்த்தினார் ஜெய்சங்கர்.

தமிழ் அரசியல் தலைமைகளை அவர்களது சமர்ப்பணங்களை அடுத்தும், அவரோ, அவரது அதிகாரிகளோ, பிரதமர் மோடியுடன் புதுடெல்லியில் சந்திப்புக்கு வருமாறு அழைப்பு விடுக்கவில்லை, சிங்கள தரப்புகளை சமாளிக்க மட்டுமே தாஜா செய்ததாகவும், பழையபடி தன்னுடைய நிலைமையே (இந்தியா) முன்னெடுத்ததாகவும், தமிழ் மக்களை இரண்டாம் தரப்பாகவும் நடத்தியதாகவும் தமிழ் மக்களும் அவர்களது தரப்புக்களும் பொருமலாம்.



நான் நேற்று மீண்டும் கூறியபடி பெருமாள் தனது கவச குண்டலங்களுடன் தனது பக்தனின் வேதனைகளை தவிர்க்க, பஸ்டாண்டில் வந்து இறங்கிய போது, 90 ஆம் நம்பர் பஸ் வரவில்லையே என்று ஆதங்கப்பட்டவனிடம், அது வரும், காத்திரு எனப் பெருமாள் சொல்லி, வைகுண்டம் போய்விட்டார்.



அதுபோல தமிழ் மக்களது பிரச்சினையில் இந்தியா தவிர்க்க முடியாத சக்தி என்று எவ்வளவோ அடித்து கூறப்பட்டும், அதனுடன் பகைமை வேண்டாம் என கெஞ்சி புத்திமதிகள் கூறிய போதும், தொடர்ந்தும் பலர் தாங்கள் நினைத்தபடி நடைமுறைக்கு பொருந்தாத சர்வதேசம் அனுசரணை பெறாத அரசியல் தீர்வுகளைப் பேசி, அவற்றைப் பெற்று விடுவோம், வென்று விடுவோம் என்று அரசியல் நடத்தியதுதான் இந்த இக்கட்டு நிலைமைக்குக் காரணம்.

தமிழ் மக்களின் இன்றுவரையான அரசியல் தலைவர்கள், தங்களது நலன்களே முக்கியமென முடிவுகளை முக்கிய தருணங்களில், தமிழீழத்திற்காகவோ,தமிழ் தேசத்துக்காகவோ எடுத்த போது, இந்தியா தமிழ் மக்களாலேயே வெளியேற்றப்பட்டதன் பின், தன்னுடைய நகர்வுகளுக்காகவும் வளங்களுக்காகவும் ஏன் முடிவுகள் எடுக்கக் கூடாது என்ற கேள்விகள் உண்டு.

முதன் முதலில் தமிழ் மக்கள் தாங்கள் ஏன் இந்த நிலைக்கு வந்தோம் என தங்கள் தலைவர்கள் நடத்திய நடத்துகின்ற அரசியலை மீள்நோக்கிப் பார்க்க வேண்டும்.

இவற்றில் இருந்து ஜனாதிபதி ரணில் சுதந்திர தினத்தில் கோடி காட்ட போவதை ஊகிக்கலாம். ஆதலால் தமிழ் மக்களின் முன்னேற்றங்களுக்காக இந்தியாவின் ஆதரவு, அனுசரணை இருப்பது அவசியம் என்பதை உணர்ந்து, மேற்படி வழிகளை அந்த அடிப்படைகளில் அமைத்திருக்க வேண்டும்.

அதேசமயம் அண்ணாரது நிலையும் ஆடிப்பெருக்கின் வெள்ளம் பாயும் நிலை அல்ல அதில் ஸ்ரீலங்கா சாமர்த்தியமாக புவியியல் அரசின் காய்களை நகர்த்துகிறது என்பது நிதர்சனம். இந்த சாமர்த்தியம் தமிழ் மக்களுக்கு வர வேண்டும். தங்கள் எண்ணுவதற்குச் சாதகமாக இல்லாதவர்கள் யாவரையும் பகைவர்களாக பார்த்தால் அவர்களுக்கு அவர்களே நண்பர்கள், அதிலும் நண்டுகூட்டங்கள்...!



(வளரும்)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.01.2023 இல் வெளியிடப்பெற்றது.